தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## <u>ஆணை நாள் 13.07.2026</u>

## <u>முன்னிலை</u>
## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)
### மாநில தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண்.CP 4573/SCIC/2024</u>**

திருமதி/ செல்வி. மு.சிவகாமி முத்துக்குமார் - புகார்தாரர்
எண்.6, பிள்ளையார் கோவில் தெரு
கீரப்பாக்கம், தேசுமுகிப்பேட்டை அஞ்சல்
திருக்கழுக்குன்றம் வட்டம்
செங்கல்பட்டு-603 109.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
வட்டார வளர்ச்சி அலுவலகம்
திருக்கழுக்குன்றம்
செங்கல்பட்டு மாவட்டம்.

## <u>ஆணை</u>

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **19.08.2024** |
| 2. | மனுதாரரின் புகார் மனு | 01.10.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 19/08/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலகம், திருக்கழுக்குன்றம் அவர்களுக்கு அனுப்பி, அதில் “திருக்கழுக்குன்றம் தாலுக்கா புல்லேரி ஊராட்சியின் வார்டு எண்.6-ல் அமைந்துள்ள R.K.Tom Nutech Private Limited Company-ன் கட்டிட அனுமதி வரைபட நகல் தருமாறு கேட்டுக் கொள்கிறேன் ” எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (13/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திருமதி/ செல்வி. மு.சிவகாமி முத்துக்குமார் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திருமதி.வி.மஸ்துரா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர்

(ஊராட்சிகள்), திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் ஆஜரானார். ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 19/08/2024 தேதியிட்ட மனுவிற்கு, இதுநாள் வரை எவ்வித பதிலும் அளிக்கவில்லை எனத் தெரிய வருகிறது. மனுதாரர், தனியார் நிறுவனத்தின் கட்டிட அனுமதி வரைபட நகல் அளிக்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய வரைபடத்தின் நகலை அளிப்பதற்கான வாய்ப்பு இல்லாமலிருந்தாலும், அதற்கான ஒரு பதிலையாவது மனுதாரருக்கு அளித்திருக்க வேண்டும். அவ்வாறான நடவடிக்கையினை அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் செய்யத் தவறியுள்ளார். **எனவே, அப்போதைய (19/08/2024 தேதிய) திரு.அறிவழகன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தற்போது சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம்) அவர்கள் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மேற்சொன்ன திரு.அறிவழகன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களிடமிருந்து காரண விளக்கக் கேட்பு குறிப்பாணைக்கான விளக்கத்தைப் பெற்று அதனை ஆணையத்தில் 07/08/2026 அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று பணிக்கப்படுகிறார்.**

3. **மனுதாரர் புகார் மனு அனுப்பியிருந்தும், ஆணையத்தின் விசாரணையின் போது, மனுதாரர் தனக்கு பதில் வேண்டுமென விருப்பம் தெரிவித்தார். எனவே, பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் கோரிக்கையினை சீர்தூக்கி பார்த்து, சரியான பதிலினை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, பின்னர், அது தொடர்பான நிறைவேற்றுகை அறிக்கை (Compliance Report) யினை 07/08/2026 அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.CP 4573/SCIC/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
வட்டார வளர்ச்சி அலுவலகம்
திருக்கழுக்குன்றம்
செங்கல்பட்டு மாவட்டம்.

2. திரு.அறிவழகன்,
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
(தற்போது சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம்)
செங்கல்பட்டு மாவட்டம்- 603313

**<u>புகார்தாரர்</u>**
திருமதி/ செல்வி. மு.சிவகாமி முத்துக்குமார்
எண்.6, பிள்ளையார் கோவில் தெரு
கீரப்பாக்கம், தேசுமுகிப்பேட்டை அஞ்சல்
திருக்கழுக்குன்றம் வட்டம்
செங்கல்பட்டு-603 109.

நகல்
1.மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
செங்கல்பட்டு மாவட்டம்.‘

2.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.

RG/Sr.PC